# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.3455/C/2024

திருமதி ரா. அமல்திரேஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தொழிலாளர் துணை ஆணையர் (தலைமையிடம்),
6-வது அவின்யூ, "P" பிளாக்,
அண்ணா நகர், சென்னை - 600 040. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 11.10.2023 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 20.10.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 06.11.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 22.11.2023 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 02.01.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.03.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திருமதி ரா. அமல்திரேஷ் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வி.ஜி. ரமேஷ் குமார், தொழிலாளர் துணை ஆணையர் (தலைமையிடம்), அண்ணா நகர், சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தொழிலாளர் நல ஆணையரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், இராஜ் நியூ மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியிலிருந்து விடுவிப்பு செய்தமைக்கு உரிய நிவாரணம் வழங்கக்கோரி விண்ணப்பித்த தனது மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரங்களை மொத்தம் 14 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு கடித எண்.ப1/32542/2023 நாள் 06.11.2023 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள தகவல் தங்களது அலுவலக வரம்பிற்குள் வராது என்றும், அத்தகவல் மனுதாரருக்கு கடிதம் வாயிலாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA.3455/C/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:-**
பொதுத்தகவல் அலுவலர் /
தொழிலாளர் துணை ஆணையர் (தலைமையிடம்),
6-வது அவின்யூ, “P” பிளாக்,
அண்ணா நகர், சென்னை - 600 040.

**வழக்கு எண்.SA.3455/C/2024**
**மனுதாரர்**
திருமதி ரா. அமல்திரேஷ்,
எண்.31 B, அம்பேத்கார் மேலத்தெரு,
16-வது வார்டு, சிவகிரி,
தென்காசி மாவட்டம் - 627 757.

Copy to: File
SNPS / 09.04.2026